மொழிச் சிக்கலைத்

தீர்க்கும் வழி

நாடாளுமன்றத்தில்

தோழர் பி. ராமமூர்த்தி எம். பி.

பேசியது :

வெளியீடு :

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

(மார்க்சிஸ்ட்)

தமிழ் மாநிலக் கமிட்டி

மொழிச் சிக்கலைத் தீர்க்கும் வழி

நாடாளுமன்றத்தில்

தோழர் பி. ராமமூர்த்தி எம். பி.

பேசியது :

வெளியீடு :

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

(மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு கமிட்டி

விலை : : 20 காசு

முதற் பதிப்பு : ஜனவரி 1968

டைம்ஸ் பிரஸ், சென்னை-5.

மொழிச் சிக்கலைத் தீர்க்கும் வழி

இந்த விவாதத்தில் உணர்ச்சிகளை கிளப்பிவிட நான் விரும்பவில்லை. பல்வேறு பகுதி மக்களை இந்தப் பிரச்னை பாதித்துள்ளது. இதை உணர்ச்சி வயப்பட்டு அணுகுவோமானால் இதற்கு ஒரு பரிகாரம் காணமுடியாது.

20 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பிறகுநம் நாட்டு மக்களுக்குகல்வி போதிக்கும் மொழி எது என்பது குறித்தும், நம் நாட்டு நீதிமன்றங்களில் எந்த மொழியில் நீதி வழங்க வேண்டும் என்பது குறித்தும், நம் நாட்டு அரசாங்க நிர்வாகத்தை எந்த மொழியில் நடத்த வேண்டும் என்பது குறித்தும் இந்த நாடாளு மன்றம் விவாதித்துக் கொண்டிருப்பதுதான் உண்மையிலேயே விசித்திரமான தொரு நிலைமையாகும்.

அடிப்படையானது

சமீபத்தில் விடுதலைப்பெற்ற எந்த நாட்டிலாவது இத்தகையதொரு விவாதம் நடக்குமென்று நான் நினைக்கவில்லை. இதுதான் நமது நிலைமை. இந்த நிலைமையில் நமது பிரச்சினைக்கு தீர்வு கண்டாக வேண்டி இருக்கிறது.

இந்த பிரச்சினையை எவ்வாறு அணுக வேண்டும்? இது குறித்து திரு. டாங்கே (வலதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர்) பேசினார். இந்தி மொழியை வளர்ப்பதில் ஆட்சியாளர்களும், மக்களும் தவறு செய்துவிட்டனர் என்றார். அதிகமான சமஸ்கிருத வார்த்தைகளை இந்தி மொழியில் புகுத்தி விட்டார்கள் என்றார். இன்றெழுந்துள்ள பிரச்சினை அடிப்

படையானது; சமஸ்கிருத வார்த்தைகளை புகுத்தியது பற்றியது அல்ல இன்றைய பிரச்சினை.

ஒரு விஷயத்தை நான் தெளிவு படுத்திவிட விரும்புகின்றேன். இந்தப் பரந்த தேசம் பிரிட்டிஷ் ஆட்சி காலத்திற்கு முன்பு அரசியல் ரீதியாக ஒன்று பட்டிருந்தது கிடையாது. பிரிட்டிஷார் வருவதற்கு முன்பு பல்வேறு சிறு சிறு இராச்சியங்களாக நமது நாடு பிரிக்கப்பட்டிருந்தது. பல அரசர்கள் ஆண்டார்கள். இதுதான் நமது நாட்டு வரலாறு இந்த நாட்டில் பொதுவான கலாச்சார ஒற்றுமை உண்டு என்பது உண்மை. கலாச்சார ஒருமைப்பாடு என்பது அரசியல் ஒற்றுமையாக ஆகிவிடாது. நம் வரலாற்றில் முதல் தடவையாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால்தான் நாம் நிர்ப்பந்தமாக ஒன்றுபடுத்தப் பட்டோம். இவ்வாறு நிர்ப்பந்தமாக ஒன்றுபடுத்தப்பட்டது நம் மக்களிடையே உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்தியது என்று கூற முடியாது.

பிரிட்டிஷ்ஆட்சியை எதிர்த்துப் போராடினேம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட பல்வேறு மொழிகள் பேசும் நாட்டு மக்களாகிய நாம், இந்த அன்னியர்களை எதிர்த்து போராடுவதற்காக ஒன்று சேர்ந்தோம். எனவே இந்திய ஒற்றுமை என்பது அன்னியரை எதிர்த்த போராட்டத்தின் காலத்தில் பிறந்த ஒற்றுமை இன்று இந்திய ஒற்றுமையை மேலும் பலப்படுத்த உதவியாக இருப்பது மேற்கூறிய பாரம்பரியம் தான். இதை அடிப்படையாகக் கொண்டே நம் ஒற்றுமையை வளர்த்து பலப்படுத்த வேண்டும்.

மொழிவழிப் புனரமைப்பு

ஆனல் சென்ற 20 ஆண்டுகளாக நாம் செய்தது என்ன? இந்திய நாட்டின் ஒற்றுமை குறித்து நாம் பேசும்போது இங்கு பல்வேறு மொழிகளை பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. இவ்வாறு பல மொழிகள் பேசும் மக்கள் வேற்று நாடுகளில் தேசிய இனத்தவர் என்று அழைக்கிறார்கள். ஐரோப்பாவில் ஒரு

தெளிவான தனியானதொரு மொழியைப் பேசிக்கொண்டு, தொடர்ந்தாற் போன்ற ஒரு பிரதேசத்தில் வசிக்கிறார்களென்றால் அந்த மக்களின் ஆட்சி ஒரு தேசிய இன ஆட்சி என்று அழைக்கப்படுகின்றது. இதே போன்று நம் தேசத்தில் வாழும் பல்வேறு மொழி பேசுகின்ற மக்களும், மேற்கூறிய மக்களைப் போன்றவர்களே. எனவே இந்திய நாட்டின் ஒற்றுமையை உருவாக்குவது, இங்கு வாழும் சகல பகுதி மக்களின் உணர்வு பூர்வமான ஒத்துழைப்பின் மூலமே சாத்தியமாகும். எந்தப்பகுதி மக்களையும் நிர்ப்பந்தபடுத்துவதின் மூலமாக இந்த ஒற்றுமை உருவாகாது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக நாம் முயற்சி செய்யும்போது நம் தேசம் வளர்ச்சி பெற்ற பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட தேசம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மொழி பேசும் மக்களையும் நான் மதிக்கிறேன். இந்தியை நான் மதிக்கிறேன். இந்தி பேசும் மக்களையும் மதிக்கிறேன். அதேபோல மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளையும் நான் மதிக்கிறேன். மொழிகள் என்பவை மக்களால் உருவாக்கப்பட்டவைகள்தானே? ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், வாழும் மக்கள் தங்களுடைய சமுதாய வாழ்வின் வளர்ச்சிப் போக்கில் ஒரு மொழியை உருவாக்குகிறார்கள். ஆங்கிலேய மக்கள்ஆங்கில மொழியை உருவாக்குகிறார்கள். ஆங்கில மொழிஇயல் வல்லுநர் சிலரால் உருவாக்கப்பட்டதல்ல ஆங்கில மொழி. அதேபோன்று இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மொழி வழி பிரிவு மக்களும் தம்தம் மொழிகளை உருவாக்குகிறார்கள். இப்படிப்பட்ட மொழிகளின் வளர்ச்சிகளைப் பற்றிப் பேசும் பொழுது அந்த மொழிகளை பேசும் மக்களுக்கு தம் மொழிகளை வளர்த்துக்கொள்ள எத்தகைய சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன என்பது முக்கியமான விஷயம். தேவையான சந்தர்ப்பங்களை அளித்தால்தானே ஒரு மொழி வளரும்? அந்த சந்தர்ப்பங்கள் அளிக்கப்படாத காரணத்தால் ஒரு மொழி வளர்ச்சி அடையாதிருக்குமேயானால் அதற்குக் காரணம் அந்த மொழி அல்ல; அதைப் பேசும்மக்களும் அல்ல.

துரதிருஷ்ட வசமாக பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அன்று நம்மை ஆட்சி செய்து வந்த ஏகாதிபத்தியவாதிகள் நம் நாட்டு மக்கள் பேசிய பல்வேறு மொழிகளின் வளர்ச்சிக்கு எத்தகைய சந்தர்ப்பமும் அளிக்கவில்லை. அக்காலக் கட்டத்

தில் நம் நாட்டு மொழிகள் எல்லாவற்றிற்கு மேல், அது தமிழாக இருந்தாலும் சரி, இந்தியாக இருந்தாலும் சரி, இந்துஸ்தானியாக இருந்தாலும் சரி, அல்லது மராட்டிய மொழியாக இருந்தாலும் சரி, அவைகளின் மேல் பல்வேறு தடைகளை விதித்தார்கள். அந்தத் தடைகள் என்ன? இந்த நாட்டு நிர்வாகத்தில், நிர்வாகமொழி என்ற முறையிலும், போதனு மொழி என்ற முறையிலும் நீதிமன்றத்தின் மொழி என்ற முறையிலும் நம் நாட்டிலுள்ள மொழிகளுக்கு எந்த வித இடமுமே அளிக்கப்படவில்லை. நம் நாட்டு மொழிகளின் வளர்ச்சிக்கு அன்று இருந்த தடைகள் இவை.

1920-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த நம் விடுதலைப் போராட்டம் கோடிக்கணக்கான மக்கள் பங்கு கொண்ட பெரும் மக்கள் இயக்கமாக மாறிய காலத்தில், நம் தேசிய இயக்கத்தின் தலைவர்கள் மக்களிடையே பேசும் பொழுது தமிழ், இந்தி போன்ற பல்வேறு பிரதேச மொழிகளில் பேச ஆரம்பித்தார்கள். தங்கள் தங்கள் தாய் மொழியிலேயே மக்களிடத்தில் அரசியல் விஷயங்களை எடுத்துக் கூறஆரம்பித்த பொழுதுதான் பெருவாரியான மக்களைஎழுச்சியுறச் செய்ய முடிந்தது.

எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. திரு. இராஜகோபாலாச்சாரி இன்று ஒரு பெரிய தமிழ்ப்பேச்சாளர். ஆனல் அவர் 1920-ம் ஆண்டுகளில் தமிழில் பேச முடியாமல் தத்தளித்தார் என்பது எனக்குத் தெரியும். திரு சீனிவாச அய்யங்கார் கூட அக்காலத்தில் தமிழில் பேச முடியாதபடி திணறினர். நான்கூட அந்த காலத்தில் தமிழில் பேச முடியாத நிலைதான். 1932-ல் தான் முதல் தடவையாக பொதுக் கூட்டத்தில் தமிழில் பேச ஆரம்பித்தேன்.

1933-ம் ஆண்டில் நான் ஒரு பொதுக்கூட்டத்தில் தமிழில் பேசிய பொழுது என் சகாக்களில் ஒருவரான தோழர் ஜீவானந்தம் நான் தமிழில் பேசி முடிந்த பிறகு அவர் பொதுக் கூட்டத்தில் பேசினர். அவர் பேசும் பொழுது என்ன கூறினர் தெரியுமா? "ராமமூர்த்தி பேசியதை நான் தமிழில் மொழி பெயர்த்து கூறுகிறேன்" என்ருர். 1933-ஆம் ஆண்டில் என்னுடைய தமிழின் நிலை அது.

நான் என்ன இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறேன் என்ருல் ஒரு மொழியை மக்கள், பல்வேறு துறைகளிலும் பயன் படுத்தும் சந்தர்ப்பம் இருந்தால்தான் அந்த மொழி எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெறும் என்பதே.

எப்பொழுது வளரும்?

நவீன ஐரோப்பிய மொழிகள் என்று கூறப்படுபவை எல்லாம் எப்பொழுது வளர்ச்சி பெற்றன? அந்த நாடுகளில் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு இருந்த காலங்களில் அல்ல. அங்கெல்லாம் நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பு ஒழித்துக்கட்டப்பெற்று ஒரு புதிய தொழில் வளர்ச்சிபெற்ற சமுதாயமாக உருவான பிறகுதான், அத்துடன் வியாபாரம் பெருகிய பிறகுதான் அந்த மொழிகள் வளர்ச்சியுற்றன. அதாவது நிர்வாகத் துறையிலும், நீதி மன்றத் துறையிலும், இலக்கியத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், வரலாறு சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், கல்வி போதிக்கும் மொழியாகவும் பயன்படுத்தப்பட்ட பிறகுதான் அந்த மொழிகள் இன்றிருக்கும் நிலையையே அடைந்தன.

அதுபோன்ற சந்தர்ப்பங்களை நம் நாட்டு நிறுவனங்களுக்கும் அளித்தால் நம்மொழிகள் பெரும் வளர்ச்சியுற்றிருக்கும்.

கல்வி போதனைக்காக பயன் படுத்தும் அளவுக்கு நம் மொழிகள் வளரவில்லை என்று கூறுவதில் அர்த்தமே இல்லை. ஒருவன் தண்ணீரில் நீந்துவதற்கு எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்? நீச்சலடிக்கும் விதி முறைகளை புத்தகத்தில் படிப்பதின் மூலமாகவா? தண்ணீரில் இறங்கி நீச்சலடித்துதான் பழகிக் கொள்ள வேண்டும். அதுபோல நமது மொழிகளை நாம் வளர்க்க வேண்டுமானுல் முதலில் செய்ய வேண்டியது என்ன? முதலில் மக்களிடையே சகலவிதமான துறைகளிலும் பயன்படுத்துகின்ற கருவிகளாக நம் மொழிகளை மாற்ற வேண்டும். அதன் பிறகுதான் நம் மொழிகள் வளர்ச்சியடையும்.

1947-ஆம் ஆண்டில் நமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது நாம் என்ன செய்தோம்? நம் நாட்டின் பல் வேறு மொழிகளுக்கு சம அந்தஸ்து அளித்தோமா? இந்த நாட்டு அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து உண்டு என்பதை அங்கீகரித் தார்களா? எல்லா மொழிகளுக்கும் சமத்துவ உரிமை உண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டதா? இதுதான் இன்றைய அடிப்படையான கேள்வி. நம் அரசியல் சட்டத்தை உரு வாக்கியவர்கள் இந்த சம உரிமையை அங்கீகரிக்கவில்லை என்பது என் கருத்து.

அரசியல் சட்டத்திலுள்ள தவறுகள்

அரசியல் சட்ட நூல் என்கையில் இருக்கிறது. மொழி களைப் பற்றிய பகுதிகளை நான் குறிப்பிடுகிறேன். அரசியல் சட்ட ஷரத்துக்கள் 343லிருந்து 350 யி வரையில் உள்ளவை மொழி சம்பந்தப்பட்டவை. இவைகளில் என்ன கூறப்படு கின்றது? "15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி மொழி அர சாங்க மொழியாக ஆகும்" என்றிருக்கிறது. இந்தப் பிரச் சினையைச் சற்று விவரமாக பின்னால் பார்ப்போம். ஆனால் ஏனைய மொழிகளைப் பற்றி என்ன கூறப்படுகின்றது தெரி யுமா? இந்தி மொழியுடன் சம அந்தஸ்து உடையவைதாம் ஏனைய எல்லா இந்திய மொழிகளும் என்று கூறப்படுகின் றதா? நிச்சயமாக இல்லை. அரசியல் சட்டத்தில் உள்ள ஒரு ஷரத்தினை அப்படியே படித்துக் காட்டுகிறேன் கேளுங் கள்.

"346, 347 ஷரத்துக்களில் கூறப்பட்டுள்ளதற்கு உட் பட்டு, ஒரு இராச்சிய சட்டசபை தங்கள் இராச்சியத்தி லுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளையோ, அல்லது இந்தியையோ, அந்த இராச்சிய நிர்வாக காரியங் களுக்கான மொழி அல்லது மொழிகளாக பயன் படுத்திக் கொள்வதற்கு தேவையான சட்டம் இயற்றிக்கொள்ளலாம்."

அரசியல் சட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டு இருப்பது ஒரு இராச்சியம் சம்பந்தப் பட்ட விஷயமாகும். ஒரு இராச் சியம் தன்னுடைய மொழி இந்தி மொழியாக இல்லாதிருந்த

போதிலும் இந்த இந்தி மொழியை தன்னுடைய இராச்சிய அரசாங்க நிர்வாகத்திற்கும் பயன்படுத்தி கொள்ள சட்டம் இயற்றிக்கொள்ளலாமென்று அரசியல் சட்டம் இவ்வாறு குறிப்பிட முன்வந்ததின் அவசியம் என்னவென்று கேட்கிறேன். இதிலிருந்து ஒரு விஷயம் தெட்டத் தெளிவாகி விடுகின்றது. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களே எல்லா மொழிகளையும் ஒரே மட்டத்திற்கு உயர்த்த முயற்சிப்பதின் அவசியத்தை உணரவில்லை என்பது தெளிவாகிவிட்டது. இந்தப் போக்கு இத்துடன் நின்றதா? இல்லை.

மற்றொரு ஷரத்து ஒன்றை நான் இப்பொழுது வாசிக்கிறேன். அரசியல் சட்டத்தில் இந்தப் பிரிவிலுள்ள கடைசி ஷரத்தில் ''இந்தி மொழியை வளர்ப்பதென்பது மத்திய அரசாங்கத்தின் பிரத்யேகமான பொறுப்பு'' என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசாங்கம் என்பது இந்தி பேசும் மக்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும், குஜராத்தி பேசும் மக்களுக்கும், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மொழி பேசும் மக்களுக்கும் பொதுவானது. இங்கு பேசப்படும் எல்லா மொழிகளையும் வளர்ப்பது மத்திய அரசின் பொறுப்பு என்று ஏன் குறிப்பிடப்படவில்லை? அப்பொழுதுதானே நாட்டிலுள்ள எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை மக்கள் அறிய முடியும்? துரதிருஷ்டவசமாக இன்றைய அரசியல் சட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நாட்டிலுள்ள எல்லா மொழிகளும் வளர்ச்சிப் பெற வேண்டுமானால் ஆரம்பத்திலிருந்தே மொழி வழி மாநிலங்கள் அமைக்கப் பட்டிருக்க வேண்டும். பல்மொழி இராச்சிய அமைப்பில் எவ்வாறு ஒரு மக்களது மொழி அரசாங்கமொழி ஆகமுடியும்? சகலமொழிக்கும் உரித்தான இடத்தை அளிக்க வேண்டும் என்பதை அரசியல் சட்டத்தை உருவாக்கியுள்ளவர்கள் மனதில் கொள்ளவே யில்லை. இதற்காக இரத்தத்தை ஆறுக பெருக்கி நாட்டில் ஜனநாயகம் வளர தங்கள் தங்கள் மொழிகளுக்கு அவற்றிற்குரித்தான இடத்தைப் பெற மொழிவழி மாநிலம் அமைப்பதற்காக மாபெரும் போராட்டங்கள் நடத்தி ஆட்சியாளர்களை நிர்ப்பந்த

படுத்தவேண்டி வந்தது. இவ்வாறு போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதின் காரணமாகத்தான் பல்வேறு உணர்ச்சிகளும் மேலோங்கின.

எந்த நபர்கள் நம்மொழியை வளர்ப்பதற்கு விரும்பவில்லையோ அதே நபர்கள்தான் இன்று இந்தி மொழியைத் திணிக்க விரும்புகிறார்கள் என்ற எண்ணம் இன்று மேலோங்கி உள்ளது. துரதிருஷ்டவசமானதுதான். ஆனால், இந்த உண்மையை நீங்கள் மூடி மறைத்துவிடமுடியாது. இதுதான் இன்றைய நிலைமை. இந்துஸ்தானி பேசும் பிரதேசங்களில் வாழும் என் நண்பர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உண்மையை உணரும்படி வேண்டுகிறேன்.

சாதாரண விஷயங் கூட

இப்படிப்பட்ட நிலைமை உருவாகி இருக்கும் பொழுது இந்த நாடு முழுவதிற்குமாக, செயல்படும் மத்திய அரசாங்கம் பல்வேறு மொழி பேசும் மக்களிடையே செயல்படும் மத்திய அரசாங்கம் நான் குறிப்பிடப் போகும் ஒரு சாதரண விஷயத்தை செய்ய முடியாதாஎனக் கேட்கிறேன். தமிழ் நாட்டில் செயல்படும் தந்தி தபால் நிலையங்கள் தமிழில் பணவிடைத் தாள்களை அச்சிட்டு வழங்கக் கூடாதா எனக் கேட்கின்றேன். ஆந்திரத்தில் தெலுங்கிலும், மகாராஷ்டிரத்தில் மராத்தியிலும், மைசூரில் கன்னடத்திலும் அத்தாள்களை அச்சிடக் கூடாதா எனக் கேட்கின்றேன். இன்றைய ஆட்சி அவ்வாறு செய்ய மறுக்கின்றது. (குறுக்கீடுகள்) பணவிடைத் தாள்களில் எழுதும் பொழுது அதைப் புரிந்து கொண்டால்தானே எழுத முடியும்? புரியாமல் இருந்தால் எவ்வாறு எழுத முடியும்? பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் கூட ஆங்கிலத்துடன் ஒவ்வொரு பிரதேச மொழியும் அச்சிடப்பட்டிருந்தது. இது போன்று செய்யாததின் விளைவாக ஒரு பெரும் வெறுப்பைத்தான் இன்று உருவாக்கி இருக்கிறீர்கள்.

நான் ஆந்திர நாட்டின் நெடுஞ்சாலை வழிகளில் சென்றிருக்கிறேன். அங்கு ஊன்றப் பெற்றிருந்த மைல் கற்களைப்

பார்த்தேன். யாவருக்கும் புரிந்த அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சர்வதேச எண்கள் அந்தமைல் கற்களில் பொறிக்கப்படவில்லை. மாறாக இந்துஸ்தானி எண்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதை எதற்காகச் செய்தீர்கள்? மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வழி இதுதானா? அவர்களது கசப்புணர்ச்சிகளைத் தூண்டி விடுபவை இவை யல்லவா? கசப்புணர்ச்சி மட்டுமல்ல, இவ்வாறு செய்பவர் கள் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்தப் போகிறார்கள் என்ற எண்ணத்தைத்தானே அந்த மக்களிடையே தூண்டியுள் ளது. துரதிருஷ்டவசமாக இந்த எண்ணம் இன்று உருவாக் கப்பட்டுள்ளது. இதைப் போக்குவதற்கான முயற்சி செய்ய வில்லை என்றால் இந்த பிரச்சினையை ஒருக்காலும் தீர்க்க முடியாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

எவ்வாறு பரப்புவது?

இந்துஸ்தானி மொழியை எதிர்ப்பவன் அல்லன் நான். இந்துஸ்தானி மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசங் களில் பொதுக் கூட்டங்களில் நான் இந்துஸ்தானியில்தான் பேசுகிறேன். ஆகவே நான் இந்துஸ்தானி மொழிக்கு எதி ரானவன் அல்ல.

நேற்று டாக்டர் சுசிலா நய்யார் பேசினார்கள். அந்த அம் மையார் பேசும்பொழுது தட்சிண பாரத ஹிந்தி பிர சார சபாவின் தலைவரான திரு சத்திய நாராயணா கூறிய யதாக சிலவற்றை இங்கு சொன்னார்.

தெற்கே உள்ள மக்களிடையே இந்தி வேகமாக பரவி வருவதாகச் சொன்னார். ஆம். இதில் எனக்கும் ஒரு பங்கு உண்டு. என்றாலும் நீங்கள் இன்று கையாளுகின்ற கொள் கையை திரு.சத்தியநாராயணா இப்பொழுது ஆதரிக்கவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். திரு சத் திய நாராயணா இப்பிரச்சினையைப் பற்றி இன்று என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றி டாக் டர் சுசிலா நய்யார் இங்கு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தெற்கே இந்தியைப் பரப்பியதில் பங்கு

கொண்டவர்களுக்கு கசப்பான அனுபவம் ஒன்று உள்ளது. இந்தப் பிரச்சினையை அணுகும் முறையில் மாறுதல் வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபாவை பொருத்த வரைக்கும் யார் இந்தியை தாமே விரும்பி கற்றுக் கொள்கிறார்களோ அவர்களுக்குத் தான் அது சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்த சபா இந்தியை யார் மீதும் திணிக்கவில்லை. இந்தியைப் பற்றி மகாத்மா காந்தி பேசிய காலத்தில் அதை யார் மீதும் திணிக்கவேண்டும் என்று அவர் கூறவில்லை' இன்று கையாளப் படும் போக்கை நிச்சயமாக மகாத்மா காந்தி ஆதரிக்க மாட்டார் என்று நான் உறுதியாக சொல்ல முடியும். இன்று கையாளப்படும் முறை என்னவென்றால் இந்தி கொல்லைப்புற மாக மக்கள் மீது நிர்ப்பந்தமாக சுமத்தப்படுகின்றது என் பதே ஆகும். இதுதான் மக்களிடையே வெறுப்பையும், கோபத்தையும் தூண்டி விட்டுள்ளது (குறுக்கீடுகள்)

இது ஜனநாயக அமைப்புத்தானா ?

இப்பொழுது செய்ய வேண்டிய, எடுக்க வேண்டிய சாதாரண நடவடிக்கை என்ன? பல்வேறு மொழிகளை பேசுகின்ற நபர்கள் இந்த சபையில் கூடியிருக்கின்றோம். இவர்கள் தங்கள் தங்கள் மொழியில் பேசித் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கு அனுமதிக்கப் படவில்லை. இதற்காகவே ஒரு போராட்டம் நடைபெற வேண்டி இருக்கிறது. சுதந்திரம் அடைந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகுங் கூட இந்த போராட்டம் இன்னும் முடியவில்லை. இந்தி பேசாத ஒருவர் உதாரணமாக மகாராஷ்டிரத்திலுள்ள சடாராவிலிருந்து இங்கு பிரதிநிதியாக இருக்கும் தோழர் நானா படேல்—1942 ஆம் ஆண்டுகளில் அங்கு "சுதந்திர சர்க்கார்" அமைத்த மக்களின் புகழ் மிக்க தலைவர் அவர் —இங்கு வந்து வாய் மூடிமௌனியாக வீற்றிருக்கிறார். அவருக்கு ஆங்கிலமும் தெரியாது, இந்தியும்தெரியாது. இது தான் நிலைமை. எனவே இங்குள்ள பிரதான பிரச்சினை என்ன ? இந்திய அரசாங்கம் எல்லா மொழிகளுக்கும் சமத்துவ உரிமையை அங்கீகரித்துள்ளதா என்பதேயாகும். இந்த 20 ஆண்டு காலத்தில் பல மொழிகள் பேசும் மக்க

ளுக்கு சமத்துவ உரிமை அளித்திருக்கிறதா என்பதே பிரச்சினை. (குறுக்கீடுகள்)

குறிப்பிட்டதொரு மொழியை ஒருவர் இந்த சபையில் பேசுகிறாரா இல்லையா என்பது அல்ல இங்குள்ள பிரச்சினை. ஒருவர் பேசுவதை இந்த நாடாளு மன்றம் புரிந்து கொள்ள முடிகிறதா என்பது தான் பிரச்சினை. இன்றைய உடனடியான பிரச்சினை இது. இங்கு ஒரு ஜனநாயக அமைப்பை நடத்துகிறோமா அல்லது கேலிக்கூத்து நடத்துகிறோமா? இதுதான் கேள்வி. இது ஜனநாயகம்தான் என்றால் என்னுடன் இங்கு வீற்றிருக்கும் சக உறுப்பினர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை நான் புரிந்துகொள்ள வேண்டாமா? இதென்ன விசித்திரமாக இருக்கின்றதே! அதனால்தான் நான் மீண்டும் சொல்கிறேன். இந்த 20 ஆண்டுகளாக இந்த ஆட்சியாளர்கள் இந்த நாட்டிலுள்ள எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்க தவறியிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதுதான் இன்றுள்ள அடிப்படையான பிரச்சினை.

தவறான போக்கு

இதைக் கூறியபின் இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். திரு டாங்கே சொன்னார். "ராக வீர ஹிந்தி" நம்மீது சுமத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார். அரசியல் சட்டத்தின் 35-வது ஷரத்து இருக்கின்றது. அது என்ன கூறுகின்றது தெரியுமா?

"இந்தி மொழியை வளர்ப்பது, பரப்புவது மத்திய அரசாங்கத்தின் கடமையாக இருக்கும். இந்திய நாட்டின் கூட்டுக் கலாசாரத்தின் பல்வேறு அம்சங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய ஒரு கருவியாக அது இருக்க வேண்டும். இந்திக்கே உரித்தான சிறப்பியல்புகளை பாதிக்காமல் ஹிந்துஸ்தானத்தில் வழங்கும் பதப் பிரயோகங்கள் எழுத்து நடை ஆகிய உருவங்களையும் உபயோகித்து இந்தி மொழியை செழுமைப் படுத்தவேண்டும்." என்று அரசியல் சட்டத்தின் 351-வது ஷரத்து கூறுகின்றது. இதிலிருந்து தெரிவதென்ன? அரசியல் சட்டத்தின் கர்த்தாக்கள் இந்தியி

லிருந்து ஹிந்துஸ்தானி வேறுபாடு உடையது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்த ஷரத்தின் மற்றொரு பகுதி கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இந்துஸ்தானியில் பயன் படுத்தப்படும் சொற்களையும், எட்டாவது பட்டியலில் கூறப்பட்ட ஏனைய எல்லா இந்திய மொழிகளில் பயன்படுத்தப்படும் சிறப்புச் சொற்களையும் இந்தி ஏற்றுக்கொண்டு தன்னை செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தி, இந்துஸ்தானி சொற்களையும், ஏனைய இந்திய மொழி சொற்களையும் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்துஸ்தானி என்பது அரசியல் சட்டத்தின் எட்டாவது பட்டியலில் இல்லாத ஒரு மொழி என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

அந்த ஷரத்து அத்துடன் நின்றிடவில்லை. மேலும் ஒரு விஷயத்தை குறிப்பிடுகின்றது. அது என்ன? இந்தி மேற்கூறிய மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக் கொள்வதுடன் "எங்கெங்கெல்லாம் தேவையோ அவசியமோ அங்கெல்லாம் பிரதானமாக சமஸ்கிருதத்திலிருந்தும் அடுத்தபடியாகஏனைய மொழிகளில் இருந்தும் சொற்களை எடுத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று இந்த ஷரத்து மேலும் குறிப்பிடுகின்றது. இப்பொழுது நிலைமை தெளிவாகிறதல்லவா? இந்தி மொழியை செழுமைப் படுத்த பிரதானமாக இன்று நடைமுறையில் மக்களால் பேசப்படும் மொழிகளிடமிருந்து சொற்களை எடுத்துக் கொள்வது என்பது மட்டுமல்ல இந்த தேசத்தில் யாரும் புரிந்து கொள்ள முடியாத சமஸ்கிருதத்தில் இருந்து பிரதானமாக எடுத்துக்கொள்ள வேண்டுமாம். (குறுக்கீடுகள்)

அவைத்தலைவர் அவர்களே! சமஸ்கிருதம் என்பது நல்ல மொழிதான் எனக்கு சமஸ்கிருத மொழி தெரியும். அதைக் கற்றுக்கொள்ள நான் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. சமஸ்கிருதம் என்பது ஒரு இயற்கையான மொழி அல்ல. செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு மொழி(குறுக்கீடுகள்) எவ்வளவு செயற்கையாக உருவாக்கப் பட்டது என்பது

எனக்குத் தெரியும். அதன் இலக்கணம் படுபயங்கரமாக ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொல்லேயும் எவ்வளவு கஷ்டமானதாக ஆக்கியிருக்கிறார்கள்? "தந்ரத்ய விசித்ர தர்ஷாதக் மனஸ்மாக்ர பிரத்யக்ர பிரயும்தஸ் டிகாடிளாசாலம்பஜிக்புஞ் கர்ததக் லிதக் நககல் சுமுகாத்'' என்று சம்பூரண ராமாயணத்தில் வரும் இந்த வார்த்தை நான் கற்றுக்கொள்வதற்கு என் தாத்தாவிடமிருந்து நான் வாங்கிய அடிகள் இன்னும் ஞாபகம் இருக்கின்றது.

பெரும் அறிவுச் செல்வம் சமஸ்கிருத மொழியில் இருந்த போதிலுங்கூட இந்த நாடு ஏன் முன்னேற முடியவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பூமி உருண்டையானது என்பதை கலிலியோவுக்கு முன்பே கண்டுபிடித்த ஒருவர் இந்த நாட்டில் இருந்தார். அவர் பெயர் பாஸ்கரா என்பது ஆகும். கணித முறையில் பூஜ்யம் என்ற ஒரு அம்சத்தை கண்டுபிடித்தவர்கள் இந்திய கணித விஞ்ஞானிகள். இத்தனை சாதனைகள் இருந்தும் நம்நாடு ஏன் முன்னேறவில்லை? முக்கியமான காரணங்களில் ஒன்று என்னவென்றால் அறிவுப் பொக்கிஷங்களை பெற்றிருந்த மொழி விரல்விட்டு ஒரு சிலரே கற்றுக் கொள்ளக் கூடிய சமஸ்கிருத மொழியாகும். அவர்களுடைய ஏகபோக சொத்தாகத்தான் இருந்தன. பத்தாண்டுகள் அந்த மொழியை கற்க செலவழிக்க வேண்டும். அதன் பிறகுதான் அதிலுள்ள விஷயங்களை கற்க முடியும். இந்த தேசத்தின் சாதாரண குடிமக்கள் இந்த மொழியைக்கூட படிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இது தான் இந்த தேசத்தின் நிலை.

மாறுதல் தேவை

நம் வருங்காலத்தின் வளர்ச்சிகுறித்து பேசும்போது நாம் சென்ற காலத்தில் செய்த இதே தவறை மீண்டும் செய்யாமலிருக்க வேண்டும். நம் நாட்டு மக்களுக்கு சகல விஷயங்களையும் போதிக்க வேண்டுமானால் போதனை மொழியாக இன்று ஆங்கிலம் இருப்பதை உடனடியாக கைவிடவேண்டும் என்று கூறுகிறேன். இதைச் செய்ய சர்வ கலாசாலை துணை வேந்தர்களின் ஆலோசனையை நாம்

கேட்க வேண்டியதில்லை. அவர்கள் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்துவிட்ட நபர்கள். அவர்கள் ஆலோசனையைக் கேட்டுப் பயனில்லை.

மொழிகளுக்கு சம அந்தஸ்து

இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு பரிகாரம்தான் என்ன? என்னுடைய இந்தி பேசும் நண்பர்கள் ஒரு விஷயத்தை உணர்வது மிக மிக அவசியம். நம் நாட்டிலுள்ள எல்லா மொழிகளின் சமத்துவத்தை அவர்கள் அங்கீகரித்தாக வேண்டும். பிரச்சினைகளை உணர்ச்சி வயப்பட்டு அணுகாமல் இருக்கும் சூழ்நிலை ஏற்படும் வகையில் இந்த நிலைமை இருக்க வேண்டும். அதுவரை ஆங்கிலம் நீடிப்பது அவசியம். இது தற்காலிக பரிகாரம்தான். இந்தி பேசும் நண்பர்களுக்கு இந்த பிரச்சினையில் ஒரு பிரத்தியேகமான பொறுப்பு ஒன்று இருக்கின்றது. இந்தி மொழி பேசும் அவர்கள் இந்த நாட்டின் மக்களின் கணிசமான தொரு பகுதியாவர். நாளை ஒருக்கால் இயற்கையான வளர்ச்சி போக்கில் அமைதியான சூழ்நிலையில் நடைமுறை அத்தியாவசியத்தை முன்னிட்டு மத்திய நிர்வாகத்திற்கு தேவையான ஒரு மொழியைப் பற்றிய சுமூகமான ஒரு முடிவுக்கு வரமுடியும் ஆகவே இன்று அதற்குத் தேவையான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது அவசியம். அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, உணர்ச்சிகளை கிளறிவிட வேண்டாம் என வேண்டுகிறேன். இது இந்தி பேசும் பிரதேசத்தில் உள்ளவர்களின் பொறுப்பு.

ஆங்கிலம் நீடிக்கவேண்டும்

இந்தி பேசும் பிரதேசத்தில் உள்ளவர்கள் தங்களுடைய மொழியை எப்படியாவது ஒரு ஆட்சி மொழியாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக இத்தனை விருப்பு வெறுப்புகளுடன் நடந்துகொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளை ஏனைய மக்கள் கூறமுடியும். சென்ற 20 ஆண்டுகளில் இந்த பிரச்சினைகளில் பல குளறுபடிகள் செய்யப்பட்டிருப்பதின் காரணமாக இந்த நிலைமை எழுந்துள்ளது. ஆகவே நாம்

இன்று ஒரு சமரசத்திற்கு வரவேண்டும். தற்காலிகமாக ஆங்கிலத்தையே தொடர்ந்து நீடிக்க எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும். இதை ஒப்புக்கொண்டு ஒவ்வொரு இராச்சியத்திலும் அந்த இராச்சிய மொழியை மிக உயர்ந்த மட்டத்திற்கு வளர்க்க சகல முயற்சிகளும் செய்யவேண்டும். அதைச் செய்தோமானால் 5 அல்லது 10 ஆண்டுகளில் இப்பொழுது ஆங்கிலம் மட்டும் பேசும் சனம் பிராங்கு அந்தோணி ஆங்கில வல்லுநர்கள் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள் என்பதை காண்பார். அந்த சமயத்தில் எத்தகைய விருப்பு வெறுப்பும் இல்லாமல் இந்திய மொழிகளில் எந்த மொழியைக் கொண்டு எல்லா இராச்சியங்களுக்கும் பொதுவான காரியங்களில் ஈடுபடுவது என்பது குறித்து முடிவு செய்து கொள்வார்கள். எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அத்தகைய சூழ்நிலைமை ஏற்பட்டால் மிகப் பெரும்பாலான மக்களால் பேசப்படும் இந்துஸ்தானியை மத்திய அரசிற்கும், மக்களுக்குமிடையே உள்ள தொடர்பு மொழியாக அங்கீகரிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

பிரதேச மொழிகளை மத்திய நிர்வாகத்திற்கு பயன்படுத்துக

நான் கூறியது ஒரு தற்காலிகத் தீர்வுக்கான ஆலோசனை தான். ஆனால், இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவோ இந்தப் பிரச்னைக்கு எந்தத் தீர்வுமே அளிக்கவில்லை. அடிப்படையான தீர் வுஎன்னவென்றால் எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிப்பதுதான். மத்திய அரசாங்கத்துடன் தமிழ் நாட்டு அரசாங்கம் தமிழில் தொடர்பு கொள்ளுவதற்கு தடங்கலாக இருப்பது எது என்று கேட்கிறேன்? மொழி பெயர்ப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டுமானால் ஒரு சில கோடி ரூபாய் செலவிட்டாலும் தவறில்லை. இந்நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க இது ஒரு பெரிய செலவாக ஆகிவிடாது.

அதேபோல் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் மத்திய ஆட்சிக்கு தன் சொந்தத் தாய்மொழி மூலம் விண்ணப்பம் செய்துகொண்டு அதே மொழியிலேயே பதிலையும் பெறும் உரிமை இன்று இல்லாதிருக்கிறது. இன்றுள்ள அரசியல் சட்டம் இதற்கான உத்தரவாதம் செய்யவில்லை. இந்த உத்தரவாதத்தை ஏற்படுத்துவதும் மிக மிக அவசியமாகும்.

அதேபோல் இந்தி மொழி பேசாத பிரதேசங்களிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களில் அந்தந்தப் பிரதேச மொழிகளிலேயே அந்த அலுவலகங்களை நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். உதாரணமாக கேரளத்திலிருந்து செயல்படும் மத்திய அரசின்வருமான வரி இலாகா எதற்காக ஆங்கிலத்தையோ அல்லது இந்தியையோ பயன் படுத்தவேண்டும் என்று கேட்கிறேன்? மலையாள மொழியை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? இந்த ஏற்பாட்டினைச் செய்யவில்லை என்றால் எல்லா மொழிகளுக்கும் சமத்துவ உரிமை அளிக்கப்பட்டிருப்பது என்ற நிலைமை உருவாகாது. எவ்வித தங்குதடையுமின்றி, சகல மொழிகளுக்கும் சமத்துவ அந்தஸ்து அளிக்கும் இத்தகைய ஏற்பாட்டினைச் செய்யவில்லை என்றால்,இப்பிரச்னைக்கு ஒரு தீர்வும் காண முடியாது. இந்த தேசத்தின் ஒற்றுமையை இன்றைய ஆட்சியாளரின் போக்கு சீர்குலைக்கிறது. மத்திய அரசை எச்சரிக்கிறேன். நான் சுட்டிக்காட்டிய வழியில் தங்களுடைய அடிப்படையான பார்வையினை மாற்றிக் கொள்ளவில்லையானால் இந்திய நாட்டின் ஒற்றுமையை சீர்குலைத்ததற்கான பொறுப்பாளிகள் அவர்களாகத்தான் இருக்கமுடியுமென்று எச்சரிக்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போலிட் பீரோ அறிக்கை

பொலிட் பீரோவின் தீர்மானம் வருமாறு :

1963-ம் வருட ஆட்சிமொழிச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் அரசாங்கம் ஒரு திருத்த மசோதா கொண்டு வந்துள்ளது. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை

ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகிப்பதற்கு அப்போதையப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு கொடுத்திருந்த வாக்குறுதிக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கொடுக்க இது வகை செய்வதாகக் கருதப்படுகிறது.

இந்த மசோதாவுக்குக்கூட இந்தி மொழி பேசப்படும் பகுதிகளிலிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்தி மொழி பேசும் மக்கள்மீது ஆங்கிலம் திணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தியை ஒரே ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதை நிர்ப்பந்தமாகத் துரிதப்படுத்துவது சரியல்ல என்றும், அதை மெதுவாகச் செய்ய வேண்டும் என்றும் மும்மொழித் திட்டம் இந்த நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்றும் நோக்கமுடையது என்றும் கூறி காங்கிரஸ் தலைமை அவர்களைச் சாந்தப்படுத்த முயல்கிறது.

இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதை எதிர்க்கும் சிலர் ஆங்கிலத்தை மட்டுமே ஒரே ஆட்சி மொழியாகவும், உயர் கல்விக்கான போதனு மொழியாகவும், உயர்நீதிமன்றங்கள், சுப்ரீம் கோர்ட்மொழியாகவும் மத்திய நிர்வாக மொழியாகவும் பிரகடனம் செய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

கட்சி நிலை

நாடாளுமன்றத்திலும், மத்திய நிர்வாகத்திலும் எல்லா தேசிய மொழிகளின் சமத்துவமும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு மாநில மொழியையும் அந்தந்த மாநிலங்களிலும் ஆங்கிலத்துக்குப் பதிலாக உயர்ந்த மட்டம் வரை போதனு மொழியாக உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் எல்லா பொது, அரசு ஸ்தாபனங்களிலும் (நீதி மன்றங்கள் உட்பட) உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் நம் கட்சி தன்னுடைய திட்டத்தில் கூறியுள்ளது. அகில இந்திய ஆட்சி மொழியாக இந்தியின் உபயோகம் கட்டாயமாக இராது. ஆனால் மத்தியில் நிர்வாக மொழியாக அது இஷ்ட பூர்வமாக வளர்க்கப்பட

வேண்டும். இந்தியாவின் வெவ்வேறு மாநில மக்களுக்கிடையே தொடர்புக்கான சாதனமாக அது ஊக்குவிக்கப்படவேண்டும்.

ஆட்சி மொழி மசோதா மீது தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையைக் கருதி நம் கட்சி நிலையை மீண்டும் வலியுறுத்த பொலிட்பீரோ விரும்புகிறது.

இந்தி திணிப்பு

காலம் சென்ற பிரதம மந்திரியின் வாக்குறுதியை அமுலாக்குவதற்குக் கூட போதுமானபடி திருத்த மசோதா இருக்கவில்லை.

யூனியனின் எல்லா அரசாங்க காரியங்களுக்கும் நாடாளுமன்றத்தில் அலுவல் நடத்துவதற்கும் இந்தியுடன் ஆங்கிலத்தின் உபயோகத்தையும் அது கட்டாயமாக்கவில்லை. இந்தி பேசாத மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துக்கும் வேறு சில காரியங்களுக்கும் மட்டுமே இந்தியுடன் ஆங்கிலத்தையும் உபயோகிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் அரசாங்கம் கொண்டு வந்துள்ள தீர்மானமும் மத்திய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைளும் மேலும் அது எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகளும் இந்தியை ஆட்சிமொழியாக நிர்ப்பந்திக்கவும் முன்பு ஆங்கிலம் இருந்த இடத்தில் அதை வைக்கவும் உறுதி பூண்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இந்தியை ஒரே ஆட்சி மொழியாகத் திணிக்கும் இந்த முயற்சியை நம் கட்சி எதிர்க்கிறது என்று பொலிட்பீரோ அறிவிக்கிறது. இந்திய யூனியனின் ஐக்கியத்தைக் குலைக்கவே இந்த முயற்சி வழிவகுக்கும்.

கட்சியின் கோரிக்கைகள்

ஆகவே நம் கட்சி கீழ் வருமாறு கோருகிறது.

1. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை யூனியனின் எல்லா அரசாங்க காரியங்களுக்கும் நாடாளுமன்ற அலுவலுக்கும் ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப் படுவதைக் கட்டாயமாக்கும் முறையில் இந்த மசோதா திருத்தப்பட வேண்டும். மொழிக் கொள்கைகளை மாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு எந்த விதி இயற்றும் அதிகாரமும் இருக்கக் கூடாது.

2. மத்தியில் நிர்வாக மொழியாக இந்தியை பல மொழிகள் பேசும் இந்திய மாநிலங்களின் மக்கள் தாமாகத் தேர்ந்தெடுக்கும் வரை தற்போதைய நிலைமை நீடிக்க வேண்டும் என்று நம் கட்சி விரும்புகிறது. ஆங்கில மொழியுடன் இந்தியும் மற்றெல்லா இந்திய மாநில மொழிகளும் சமமாக வளர்க்கப்பட்டு மத்தியில் முடிந்த அளவு அதிகக் காரியங்களுக்கு உபயோகிக்கப்பட வேண்டும். மாநிலங்களில் மாநில மொழிகள் பல்கலைக் கழகங்களிலும், நீதிமன்றங்களிலும், எல்லாக்காரியங்களுக்கும் மாநில நிர்வாகம் முழுவதையும் நடத்துவதற்கும் உபயோகப்படுத்தப் பட வேண்டும்.

3. கல்வியில் மும்மொழித் திட்டத்தை நம் கட்சி எதிர்க்கிறது. அது குழந்தைகள் மீது ஆங்கிலத்தையும் இந்தியையும் அல்லது வேறெந்த நவீன மொழியையும் திணிக்கிறது. அது குழந்தைகள் மீது அனாவசியச் சுமையை ஏற்றி குறைந்த பட்ச கல்வி பொதுத் தரங்கள் பெறுவதைக் கூட தடுக்கிறது.

நம் கட்சியின் நிலை வருமாறு:

(அ) பல்கலைக் கழகம், பட்டப் பின் படிப்புக் கட்டங்கள் உள்ளிட்ட எல்லா கட்டங்களிலும் பிராந்திய மொழிகள் மூலமே கல்வி போதிக்கவேண்டும். குறைந்தது, ஐந்து வருடங்களுக்குள் ஆங்கிலம் அகற்றப்படவேண்டும்.

(ஆ) 7-வது அல்லது 8-வது வகுப்புவரை எலிமென்டரிக் கல்வி தாய்மொழியில் அல்லது பிராந்திய மொழியில் மட்டுமே புகட்டப்பட வேண்டும். வேறெந்த மொழியும் கட்டாயமாக்கக் கூடாது.

(இ) செகண்டரி, பல்கலைக் கழகக் கட்டங்களில் விரும்பும் குழந்தைகளுக்கு ஆங்கிலமும், இந்தியும் கற்க வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

எல்லா நிர்வாக வேலையும் குறிப்பாக வெவ்வேறு மொழிப் பிராந்தியங்களில் அல்லது மாநிலங்களில் உள்ள மத்திய அரசாங்க இலாகாக்களிலும் அலுவலகங்களிலும் கூட மக்களோடு சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் அந்தந்தப் பிராந்திய மொழிகளிலேயே நடத்த வேண்டும் என்பது நம் கட்சியின் நிலை.

மத்திய அரசாங்க வேலைகளுக்குத் தேவையான நபர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரே வேலையின் தன்மையையும் வேலைபார்க்கும் இடத்தையும் பொறுத்து அலுவலக வேலையைச் செய்வதற்கு கூடுதலாக மேற்கொண்டு மொழியைக் கற்குமாறு கேட்கப்படவேண்டும். எந்த மத்திய அரசாங்க வேலையில் சேர்க்கப்படுவதற்கும் அல்லது உத்தியோக உயர்வு பெறுவதற்கும் இந்தி, ஆங்கிலம் அல்லது வேறெந்த மொழியையும் கற்குமாறோ தேர்ச்சி பெறுமாறோ பொது முன் நிபந்தனையாக வைக்கக்கூடாது.

முடிவாக வெவ்வேறு மாநில மொழிகளுக்குச் சமத்துவத்தை உறுதி செய்வதின் மூலமே ஏககாலத்தில் அவற்றின் வளர்ச்சியை உறுதி செய்வதின் மூலமே பல மொழிகள் வழங்கும் இந்திய யூனியன் மக்களிடையே வலுவான சகோதர உணர்ச்சிகளை வளர்த்து இந்தியை மட்டுமோ அல்லது இந்தியுடன் வேறொரு மொழியையும் சேர்த்தோ மத்தியில் நிர்வாக மொழி அல்லது மொழிகளாக இஷ்டபூர்வமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் செய்ய முடியும். வேறெந்த வழியும் இந்திய யூனியன் ஐக்கியத்தை குலைக்கவே வழிவகுக்கும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
தமிழ்நாடு கவுன்சில்,
2/153, பிருட்வே,
சென்னை - 1.

டைம்ஸ் பிரஸ்', சென்னை-5.